செய்தி வெளியீடு எண்–485 நாள்–1.8.2007

## மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத்துறை அமைச்சர் திரு. சுப.தங்கவேலன் அவர்களின் அறிவிப்பு

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு

– – –

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணைய பணியாளர்களுக்கு பல ஆண்டுகளாக பதவி உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனால், சில பணியாளர்கள் தகுதியிருந்தும், பதவி உயர்வு பெறாமலேயே ஓய்வு பெற்றுவிட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க உத்தரவிடுமாறு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணைய தொழிற்சங்க நிர்வாகிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

இக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணைய பணியாளர்களுக்கு தகுதிகளுக்குட்பட்டு பதவி உயர்வு வழங்கிடுவதற்கு உடனடியாக அனுமதி வழங்கியுள்ளார்கள்.

மேலும், பதவி உயர்வு பெறும் பணியாளர்கள் அனைவரும் கடன் வசூல் பணிகளில் முழுக் கவனம் செலுத்தி, கடன் தொகையை வசூல் செய்து இணையம் பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்திடவும், தகுந்த பயனாளிகளுக்கு புதிய கடன்கள் வழங்கிடவும் நடவடிக்கை எடுத்து கூட்டுறவு வீட்டு வசதித் துறை செம்மையாக செயல்பட அரும்பாடுபடுமாறு மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

...2

பதவி உயர்வு பெறும் பணியாளர்களுக்கு அதற்கான ஆணையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் இணையத்தின் தனி அலுவலர் திரு.க.பு.பெ.பன்னீர்செல்வன், பொது மேலாளர்கள் திருமதி.இரா.யமுனாவதி, திரு.இரா.வாசுதேவன் மற்றும் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலார் திரு.சு.கோவிந்தசாமி மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

– – – – – –

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, செ–9.